


THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

## மார்ச் 2005

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 5 கனி 4



- நீதியை விதைக்கிறவனோ மெய்ப்பலனைப் பெறுவான் – நீதி.11:18
- மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் – கலா.6:7
- தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான் – கலா.6:8
- ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் – கலா.6:8
- காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான் – பிர.11:4
- விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார் – 2கொரி.9:10
- கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே; அறுப்பார்கள் – சங்.126:5
- ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதைவிதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான் – ஆதி.26:12

## ஆசிரியர் கடிதம்

வாசகர் அனைவருக்கும் இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் முகவரி மாறும் போது தயவு செய்து பதிவு எண் அதாவது **Ref.No.** ஐ எழுதி தெரியப்படுத்துங்கள். உங்கள் முகவரியை தேடி எடுக்க எங்களுக்கு அது உதவியாக இருக்கும். பத்திரிக்கையை குறித்த கருத்துக்களை வரவேற்கிறோம். இவ்விதழ் தேவைப்படுவோர் இன்றே ஒரு அஞ்சல் அட்டையில் உங்கள் முகவரியை தெளிவாக ஆங்கிலத்தில் எழுதி அனுப்பவும். 'ஒரே வழி' என்ற வேதாகம பாடத்திட்டமும் உண்டு சேர்ந்து படிக்கவிரும்புகிறவர்கள் அட்டையின் பின்பகுதியை வாசித்து அதன்படி உங்கள் முகவரியை தெரியப்படுத்தவும். நேர்முகமாக படிக்க விரும்புகிறவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

அன்புடன்,
ஆசிரியர்.

**கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்**
**(ரோமர்16:16)**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 5 மார்ச் - 2005 கனி - 4


ஆசிரியருரை

## கொடிய வஞ்சகம்
## Strong Delusion



மனிதனுடைய வாழ்க்கையிலே அவனால் தாங்கிக் கொள்ளமுடியாத ஒன்று வஞ்சகம். இந்த வஞ்சகம் பல வழிகளில் ஏமாற்றமடைய செய்கிறது. இந்த வஞ்சத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே வழி சத்தியத்தை விசுவாசிப்பதுதான். சத்தியம் என்றால் என்ன? அதை நாம் எங்கே காணலாம்? அதை தழுவிக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்விகள் நமக்குள் எழும்புகிறது. இதைக்குறித்து இச்செய்தியில் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

வஞ்சகம் அதாவது ஏமாற்றம் அநேகருடைய வாழ்க்கையில் ஏற்பட காரணம் என்ன? வேதம் கூறுகிறது: "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2தெச.2:11,12). சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும் என கூறுகிறது. அன்று முதல் இன்றுவரை மானிடர்கள் உண்மையை ஒதுக்கிவைத்து விட்டு கண்போனபோக்கிலும், மனம்போன போக்கிலும் போவதால் தேவன் அவர்களுக்குள்ளே இப்படிப்பட்டதான கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்திலே பிலேயாம் என்ற ஒரு தீர்க்கன் இருந்தான் அவனிடத்தில் மோவாபின் ராஜாவாகிய பாலாக் என்பவன் மேவாபின் மூப்பர்களையும், மீதியானின் மூப்பர்களையும் அனுப்பி "பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது; ஆகையால், நீ வந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம் பண்ணி, ஒருவேளை அவர்களைத் துரத்திவிடலாம் என்று சொல்லச்

சொன்னான். அதற்குத் தேவன் பிலேயாமை நோக்கி; நீ அவர்களோடே போக வேண்டாம்; அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம்; அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார்"(எண்.22:11,12). பிலேயாமோ பாலாக்கின் வார்த்தைகளுக்கு இணங்கி பலி பீடங்களில் ஏறத்துணிந்தவனாக அவனுடைய கூலியில் விருப்பப்பட்டான். இதைக் குறித்து யூதா குறிப்பிடுகையில் "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்"(யூதா11).

தேவன் ஒரு முறை சொல்லிய காரியத்தை மாற்றுகிறவரல்ல என்பதை முதலாவது நாம் நன்கு உணரவேண்டும். பழையஏற்பாட்டு காலத்தில் யூதாவிலிருந்து பெத்தேலுக்கு ஒரு தீர்க்கதரிசியை கர்த்தர் அனுப்பினார் அப்பொழுது அவனிடத்தில் நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் அவனுக்கு எச்சரித்திருந்தார். அவனோ அப்படியே சென்று யெரொபெயாம் காலத்தில் பெத்தேலுக்கு வந்து பலிபீடம் வெடித்து சாம்பல் கொட்டுண்டுபோம் இதுவே உம்முடைய ராஜ்யத்திற்கு அடையாளம் என்றான். அப்பொழுது அவனைப்பிடியுங்கள் என்ற ராஜாவின் கை தன்னிடமாக முடக்கக் கூடாதபடி மரத்துப்போயிற்று. ராஜா தீர்க்கதரிசியைப் பார்த்து என் கை முன்போல் இருக்கும்படி உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டும் என்றான். அந்தப்படியே அவன் விண்ணப்பம் பண்ணியபோது ராஜாவின் கை சீர்பட்டது. பின்பு ராஜா என்னோடே கூட வாரும் வெகுமானம் தருகிறேன் என்றான். அதற்கு அந்த தீர்க்கன் கர்த்தரிட்ட கட்டளையை சொன்னான். பின்பு அவன் பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல்,வேறுவழியாய்ப் போய்விட்டான்.

இதை அறிந்த ஒரு கிழவனான தீர்க்கதரிசி அவனை சந்தித்து என்னோடே வீட்டுக்குவந்து அப்பம் புசியும் என்றான் அவனோ கர்த்தருடைய கட்டளையைச் சொன்னான். அதற்கு கிழவனான தீர்க்கதரிசி உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவனை அப்பம் புசிக்க அழைத்துக்கொண்டுவா என்று கர்த்தர் என்னோடே சொன்னார் என்று பொய்யாய் சொன்னான். அவனோ நம்பிபோய் அப்பம் புசித்து தண்ணீர் குடித்தான் . அப்பொழுது கிழவனான தீர்க்கதரிசியைக்கொண்டு, "......கர்த்தர் உனக்கு கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர்குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால் உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்"(1இரா.13:21,22). ஆம், "தேவன் ஒரு விசை

சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருத்துகிறவரல்லவே"(யோபு33:14). கர்த்தருடைய வார்த்தையை பெற்று அப்படியே சொல்லுகிற தீர்க்கதரிசியே இப்படிப்பட்ட வஞ்சகத்திற்குள் அகப்பட்டு மடிந்துபோனதை வாசிக்கின்றோம். ஆகையால் பிரியமானவர்களே "வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல"(கலா.1:7). ஆனபடியால் கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாக பேசி உங்களை தன்வசப்படுத்துவார்கள். இந்த கொடிய வஞ்சகத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரே வழி நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும்.

***சத்தியம் என்றால் என்ன?***

சத்தியம் என்றால் உண்மை. அந்த உண்மை எங்கிருக்கிறது? பரிசுத்தவேதாகமத்தில் இருக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா.17:17). ஆண்டவர் அருளிச்செய்த வேதமே சத்தியம். இந்த சத்தியத்தை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா.8:32). ஆக சத்தியத்தை ஒருவன் அறியாமல் அவன் வஞ்சகத்திலிருந்து விடுதலையடைய முடியாது.

***சத்தியத்தை நாம் எங்கே காணலாம்?***

"எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). சத்தியத்தை பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புதிய ஏற்பாட்டிலே மிகத்தெளிவாக காண்கிறோம். "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா.8:31,32). இந்த சத்தியபரராகிய இயேசுவை அறிவதே நித்திய ஜீவன், அவரே நம்மை பாவத்திலிருந்தும் வஞ்சகத்திலிருந்தும் விடுவிக்கக் கூடியவர். "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும் நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்(இயேசு)" (யோவா.6:40).

***சத்தியத்தை நாம் தழுவிக்கொள்ள என்ன செய்யவேண்டும்?***

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"(யோவா14:6). இயேசுவையும் அவருடைய வழியையும் பற்றிக் கொண்டு உங்களுடைய பாவத்திற்காக மனந்திரும்பி இயேசுவை

அறிக்கையிட்டு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதே நீங்கள் சத்தியத்தில் நிலை நிற்கிறீர்கள். அப்படியே கிறிஸ்துவின் இரண்டாம் வருகைமட்டும் உங்களை பரிசுத்த ஆவிக்குள் காத்துக் கொண்டு கிறிஸ்துவானவர் நியமித்துள்ள அந்த ஒரே வழியிலே நீங்கள் வெற்றிநடை போடுவீர்கள் என்றால் நித்தியஜீவனை சுதந்தரித்துக் கொள்வீர்கள். இதற்கு விரோதமான உபதேசத்தை ஒருவன் உங்களுக்கு கொண்டுவந்தால் "அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்" (3யோவா10).

இச்செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்கிறீர்களா? அல்லது கொடிய வஞ்சகத்தில் தள்ளப்பட்டு உள்ளீர்களா? சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரையும் தேவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். ஆம் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள்? பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையில் பத்துப்பேரும் மணவாளனை சந்திக்க காத்திருந்தார்கள். மணவாளன் வர தாமதித்தபோது ஐந்துபேர் புத்தியை இழந்து விட்டனர். மணவாளன் அவர்களை அறியேன் என்றார். இன்று சத்தியத்தில் நடக்காமல் தான் அதில் நடப்பதாக கனவு கண்டுகொண்டு கிறிஸ்து வை சந்தித்தோமானால் அவருடைய மறுமொழி இப்படியாகத்தான் இருக்கும். மேலும் பிதாவின் சித்தம் செய்யாதவர்களைப் பார்த்து " அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்.8:23) என்கிறார். இங்கு தம்மை பின்பற்றிவந்தும் பிதாவின் சித்தம் செய்யாதவர்களைப் பார்த்தே சொல்கிறார் என்பதை நினைவுகூருங்கள். நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் அவருடைய சபையில் அங்கமாக இருக்கிறேன் என்று பெருமை கொண்டு இருக்கலாம் முடிவு பரியந்தம் நிலைத்திருந்தால் தான் இரட்சிக்கப்பட முடியும்.

நீங்கள் உலகத்தில் பல வழிகளில் வஞ்சிக்கப்பட்டு இருக்கலாம், அவைகள் எல்லாம் உலகமே. அது உலகத்தோடு முடிந்து போய்விடும். ஆவிக்குரிய சத்தியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் மறுமைக்குரிய ஆசீர்வாதத்தை இழக்கிறீர்கள். ஒரு மனிதனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல என்கிறார். சத்தியம் ஒருவனை போஷிக்கும், நேசிக்கும், அன்புகூரும், தாங்கும், நித்தியத்திற்கு வழி நடத்தும். கொடிய வஞ்சகத்திலிருந்து காக்கப்பட முதலாவது சத்தியத்தை விசுவாசியுங்கள். அதற்குரிய ஞானத்தையும் பெலத்தையும் தேவன் உங்களுக்கு கொடுப்பார்.

# வாசல்களைத் திறவுங்கள்

# Open Doors



***J.C.Choate***

சபையின் பணி சுவிசேஷத்தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே நம்முடைய பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் மிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவனாயிருக்கிறோம்..... செய்யவேண்டி அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப் படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப் பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும் படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஜனங்கள் உண்டு, ஒவ்வொருநாளும் மக்கள் தொகை பெருகிக் கொண்டேயிருக்கிறது, தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு; நாம் இரட்சிக்கப்பட்டிருக் கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கி றோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை **உருவாக்கலாம்**. அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு **முயற்சிசெய்வதன்** மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்னிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால்,

வாசல் நமக்கு திறக்கும், ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும், சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம், அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச் செய்வதற்கும் நீங்கள் எதிர் பார்க்கமாட்டீர்கள் - மேலும் வழக்கமாக நீங்கள் எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றோம், இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள் அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும் படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக்கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற

பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள் உலகையடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: சுவிசேஷம், இயேசுகிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப் பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம் அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற் கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்தும் பற்றிய காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி செய்யவேண்டும்.

-தொடரும்

ஆசை

1. யூதர்களுக்கு ஸ்தேவான் மீது கல்லெறிய ஆசை - அப்.7:58
2. ஐத்திகுவுக்கு சபை ஆராதனையில் தூங்க ஆசை - அப்.20:9
3. தெசலோனிக்கே சபையாரை பார்க்க பவுலுக்கு மிகுந்த ஆசை - 1தெச.2:17
4. இளைய குமாரனுக்கு தவிட்டினால் தன் வயிறை நிரப்ப ஆசை - லூக்.15:16
5. ஆபிரகாமுக்கு இயேசுவின் நாளைக் காண ஆசை - யோவா.8:56
6. இயேசுவுக்கு சீஷரோடு பஸ்காவை புசிக்க ஆசை - லூக்.22:15
7. பவுலுக்கு கிறிஸ்துவுடனே கூட இருக்க ஆசை - பிலி.1:23
8. செர்கியுபவுலுக்கு தேவ வசனத்தை கேட்க ஆசை - அப்.13:7
9. லாசருவுக்கு துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசை - லூக்16:21
10. தேமாவுக்கு இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை - 2தீமோ.4:10

உங்களுக்கு எதன் மீது ஆசை?

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து கொள்ளுங்கள் - எபி.13:15

P.அலிஸ்மேரியம்மாள்

# யார் வஞ்சகர்?

## Who are Deceivers?

***J.Glory Arjunan***



யார் வஞ்சகர்? பிரியமான சகோதரிகளே, மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள் (2யோவா.7). ஆம், இன்றைய உலகில், இயேசுவே தங்களுடைய இரட்சகர், அவரே தங்கள் பாவங்களிலிருந்து விடுவித்து ஒரு பரிசுத்தமான வாழ்வை அளித்துள்ளவர், அவரே இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் கொடுக்க முடியாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறவர், அவர் ஒருவரே தங்களை உண்டாக்கினவர் என தைரியமாய் அறிக்கை பண்ணாதவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் இவர்களைப் பார்த்து வேதம் வஞ்சகர் என்றும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறார்கள் என்றும் கூறுகிறது.

அநேக சகோதரிகள் மிக உற்சாகமாய் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் காலப்போக்கில் ஆதியில் கொண்டிருந்த அன்பையும், விசுவாசத்தையும் தள்ளிவிட்டு தங்களுடைய கிரியையினாலும், வார்த்தையினாலும் இயேசுவை அறிக்கை பண்ணாமல் மறுதலிக்கின்றனர். காரணம், உலகம் அவர்களை வழிவிலகச் செய்கிறது. ஐயோ, இயேசுவை அறிக்கையிட்டால் அல்லது நாங்கள் கிறிஸ்தவர்கள் எனக் கூறினால் அரசாங்கத்தின் சலுகைகள் பறிபோய்விடுமே, என்னுடைய குழந்தைகளின் பெயர் கிறிஸ்தவ பெயராயிருந்து கிறிஸ்தவர்கள் எனக் கூறுவோமானால் எந்த சலுகையும் பெற முடியாதே என்று எஸ்தர் என வைத்த பெயரை நாகலட்சுமி என மாற்றுகின்றனர். பீட்டர் என்ற பெயரை பெருமாள் என மாற்றுகின்றனர். அன்பு சகோதரியே உங்களுடைய குழந்தைகளின் பெயரை இவ்விதமாய் மாற்றி நிரந்தரமாக நித்திய தேவனிடமிருந்து கிடைக்கும் சலுகையை, ஆசீர்வாதங்களை இழந்து அநித்தியமான கொஞ்சகாலத்திற்கு மட்டுமிருக்கப்போகிற சலுகைக்காக இயேசுவை மறுதலிக்கிறீர்களா? கர்த்தர் உங்களைப் பார்த்து நகைப்பார். "மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத்.10:33) எனக்கூறுகிற இயேசுவின் தொனி உங்கள் காதுகளில் விழவில்லையா? மோசம் போகாதீர்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ண வொட்டார்.

மனந்திரும்பி இயேசுவை அறிக்கைபண்ணுங்கள்.

வேறு சிலர், இயேசுவைத்தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டபோதிலும், திருமணத்திற்காகவோ, வேலை வாய்ப்பிற்காகவோ, வேறுஉலக சம்பத்துக்களுக்காகவோ இயேசுவை மறுதலிக்கின்றனர். அநேகர் தங்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்கவேண்டுமென்பதற்காக தங்களுக்கு சூட்டப்பட்டிருந்த கிறிஸ்தவப் பெயர்களை மாற்றி இன்று பெரிய பெரிய பதவியில் அமர்ந்திருக்கின்றனர். அலுவலகத்தில் கிறிஸ்தவரல்லாதவர், ஆனால் வெளியில் கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளுபவர் அநேகர். இவையெல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்துவே நமக்கு நல் மாதிரியாகயிருக்கிறார். "...பிசாசு அவரை (இயேசுவை) மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்" (மத்.4:8,9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொண்டவரையே பிசாசு இவ்வாறு சோதித்தான். "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்"(மத்.4:10). அன்பு சகோதரியே, உலகப்பொருளுக்காக இயேசுவை மறுதலித்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் இயேசுவை அறிக்கைபண்ணாத வஞ்சகரும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறீர்கள். மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிடுங்கள்.

இன்னும் அநேக ஸ்திரீகள் தங்களுடைய அன்பை விட்டுவிடுகின்றனர். சதா உலகக்காரியங்களுக்காகக் கவலைப்பட்டு இயேசுவை தங்களுடைய கிரியைகளில் மறுதலிக்கின்றனர். அன்பு சகோதரியே, தவறான நோக்கத்தோடே நீங்கள் இயேசுவை பின்பற்றுவீர்களானால் ஏமாந்து போவீர்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டால் நமக்கு உலக சம்பத்துகள் அனைத்தும் கிடைத்துவிடும் என லௌகீக இச்சைகளை நிறைவேற்றும்படி பின்பற்றாதீர்கள். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"(மத்.6:33) என்று வேதம் கூறுகிறது. முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள். உண்மையான வாஞ்சையோடு உங்கள் பாவங்கள் கழுவப்பட இயேசுவே தஞ்சம் என எண்ணுங்கள். இயேசுகிறிஸ்துவின் நீதியையும், பரிசுத்தத்தையும், பாவமன்னிப்பையும் நாடுங்கள். அப்போது உங்களுடைய சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வீர்கள். இயேசு கிறிஸ்துவை சரியான

வழியில் பின்பற்றுங்கள். இயேசுவை உலகத்தார் முன் அறிக்கையிடுங்கள்.

அநேகர் மாயமான, பல தந்திரமான வழிகளைத் தெரிந்தெடுத்து வெளித்தோற்றத்தில் பக்திமான்கள் போல வேஷந்தரித்து மற்றவர்களை தங்களைப்போல மாற்றும்படி விரும்புகின்றனர். இப்பேர்ப்பட்டவர்களைக் குறித்து, "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்"(மத்.23:15) என வேதம் கூறுகிறது. இவர்களுக்கும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் சம்பந்தமேயிராது. தாங்களே கிறிஸ்தவர்கள், அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், தரிசனம் பெற்றவர்கள், என அடிக்கிக் கொண்டே போவார்கள், ஆனால் உங்களுடைய சரீரமாகிய சபைக்குத் தலை யாரென்று கேட்டால் யார் யாரையோ கூறி, தம்முடைய இரத்தத்தையே சிந்தி சம்பாதித்துக் கொண்ட கிறிஸ்துவை மறுதலித்து சபைக்கு ஏதோ ஏதோ பெயர் சொல்லுவார்கள். அன்பு சகோதரிகளே, இவர்களே கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத வஞ்சகர்களும் அந்திக்கிறிஸ்துமாயிருக்கிறார்கள். நீங்களும் இவர்களில் ஒருவராக இருப்பீர்களென்றால், இன்றே மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். அவரது நாமத்தை அறிக்கையிட்டு மகிமைப்படுத்துங்கள்.

"...மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது"(1யோவா.4:2,3). அன்பு சகோதரிகளே, நீங்கள் தேவ ஆவியைப் பெற்றிருப்பீர்களென்றால் நிச்சயமாகவே இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணி உங்கள் வார்த்தையினாலும் கிரியையினாலும் அவரை மகிமைப்படுத்துகிறவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவை அறிக்கை பண்ணாமல் மறுதலிப்பீர்களானால், "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து"(1யோவா.2:22; 2யோவா.7) என்ற வசனங்களுக்கேற்ப வஞ்சகரும் அந்திக்கிறிஸ்துவுமாயிருப்பீர்கள். எனவே மனந்திரும்பி மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுங்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து பிதாவின் முன்பாக உங்களை மறுதலியாமல் அறிக்கையிடுவார்.

பாடம் - 12

# சபையின் வரலாறு
# HISTORY OF THE CHURCH

**J.C.Choate**

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில், கர்த்தருடைய சபை அல்லது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிற அல்லது ஆரம்பிக்கப்படுகிற காட்சியைக் காண்கிறோம். அப்போஸ்தலர்கள் எருசலேமில் இருக்கின்றனர். ஆவியானவர் அவர்கள் மீது ஊற்றப்படுகிறார், பெந்தெகொஸ்தே தினத்தை முன்னிட்டு அநேக நாட்டு மக்களும் அங்கே கூடி வருகின்றனர். பேதுருவும், அப்போஸ்தலர்களும் யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக அதைஅறிவித்தனர். கிறிஸ்து மரித்தார் என்பதைக் காட்டி, இப்படியாக கடைசி நாட்கள் ஆரம்பமாயிற்று எனவும், மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் பிரசங்கிக்கப்படுகிறது எனவும் அறிவிக்கப்படுகிறது. ஏறத்தாழ 3000 ஆத்துமாக்கள் சுவிசேஷ பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றனர். கர்த்தர் அவர்களை தமது சபையில் சேர்க்கிறார். பிறகு எருசலேம் தொடங்கி யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளும் கேட்கத்தக்க வகையில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது (அப்.1:8; மத்.28:19,20; மாற்.16:15,16; கொலோ1:23).

சபை அப்போஸ்தலர்கள் காலத்தில் செழிப்படைந்தது மேலும் துரிதமாக பரவியது. பவுல் மனமாற்றமடைந்த பிறகு, மூன்று சுவிசேஷப் பயணங்களை மேற்கொண்டு யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். இதன் பலனாக அநேகர் மனமாற்றப்பட்டு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கர்த்தருடைய அநேக பிராந்திய சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. அது அவ்வளவு சுலபமாக இருந்திருக்கவில்லை. மாறாக ஏராளமான உபத்திரவங்களிருந்தன. முதலாவதாக எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்ட சபை உபத்திரவத்தைக் கண்டது. ஆகையால், சிதறிப்போன சீஷர்கள் எங்கும் திரிந்து வசனத்தை பிரசங்கித்தனர் (அப்.8:1-4). காலம் கடந்து, ரோமர்கள் அநேக பிரச்சனைகளுக்காக கிறிஸ்தவர்களைக் குற்றப்படுத்திக் கொண்டிருந்தனர்; ரோமயுத்த காலத்திலும் ரோம அரசாங்கம் ஆளுகை செய்த எவ்விடங்களிலும், உபத்திரவப்படுத்துவதையே விளையாட்டாக கொண்டிருந்தனர். இறுதியாக பவுலை

சிறை பிடித்து விசாரணைக்காக ரோமாபுரி கொண்டு சென்றனர். யோவானைத் தவிர மற்ற அனைத்து அப்போஸ்தலர்களும் கிறிஸ்து நிமித்தம் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, ஏன் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் கூட தங்களின் உயிரை இழந்தனர்.

உபத்திரவங்களுக்கும் அப்பால் சபை வளர்ந்து பெருகியது. உபத்திரவங்கள் சபையை பெரிதாக கீழே தள்ளவில்லை. ஆனால் சபைக்குள் நடந்தவையே வீழ்ச்சியை கொண்டு வர ஆரம்பித்தது. விசுவாசத்தை விட்டு விலகிப் போவது எப்பொழுது என்பதை அப்போஸ்தனாகிய பவுல் முன்னுரைத்தான். இன்னொரு வார்த்தையில் சொன்னால், கர்த்தருடைய சபையின் அநேக அங்கத்தினர்கள் தவறான வழிகளில் விழுந்து போகும் காலம் வரும் என்று அவன் சொன்னான். "அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும் நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையும் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப் படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும் தேவனுடைய ஆலயத்திலே தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிற வனாயுமிருப்பான். நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது. ஆகிலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது, நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை, சாத்தானுடைய செயலின்படி சகல

வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத் தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2தெச.2:1-12). எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பவுல் பேசும்போது, "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தமது சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய் உங்களுக்குள்ளே வரும். உங்களில் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று, அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷக் காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்கு புத்திசொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப்.20:30,31).

பவுல் எச்சரித்தபடியே சபைக்குள்ளிருந்து எழும்பியவர்களும் கிறிஸ்துவைப் பின்பற்றினோர்களில் அநேகரை வழிவிலகப்பண்ணினார்கள். சபையின் ஆளுகை அமைப்பிலே விசுவாசத்தைவிட்டு வழுவிப்போன காரியம் ஆரம்பித்ததாக உலக வரலாறு கூறுகிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் தன் தன் மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் கொண்டு சுய ஆளுகை அமைப்பை பெற வேண்டுமென்பது கர்த்தருடைய திட்டம். இருப்பினும், ஒரு காலகட்டத்தில் அவைகளில் ஒரு மூப்பரை அல்லது கண்காணியை அநேக பிராந்திய சபைகளில் ஆளுகை செய்யும்படி உயர்த்தினர். இதன் விளைவாக அகில உலகத்திலுமுள்ள அநேக பிராந்திய சபைகளுக்கும், ஒரு பொதுவான கண்காணி நியமிக்கப் பட்டான். ஆகிலும் இது ஒரு இரவுக்குள் நடந்துவிட்ட சம்பவமல்ல, அநேக வருடங்களினூடே (கி.பி.606-ல்) முதலாவது விழுந்து போன சபையார்களின் அமைப்புக்கு உலகப் பொது கண்காணி போப்பாக மாறி, இன்று கத்தோலிக்கர் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்களுடைய பிரிவு சபை உருவாயிற்று. கர்த்தருடைய சபைக்கு என்ன நேர்ந்தது? விசுவாசமுள்ள சிலர் தொடந்து

நிலைத்திருந்தனர்,இருந்த போதிலும் அவர்கள் முழுமையாகக் கவனம் செலுத்தப் படவில்லை. ஆகிலும் கர்த்தர் தமது சபை அல்லது ராஜ்யம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்றும் அது செய்ய வேண்டியவைகள் இன்னதென்றும் வாக்களித்தார்.

மார்க்க உலகை பொறுத்தவரையில், கத்தோலிக்கசபை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. உண்மையென்னவெனில், இருண்டயுகம் என்றழைக்கப்படுகிற அநேக நூற்றாண்டு காலமாக, உலகை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. இது பொது ஜனங்கள் யாரும் வேதத்தைப் படிக்க அனுமதிக்காமலும், பாதிரியார்களே வேதத்தைப்படித்து புரிந்து கொள்ள தகுதிபெற்றவர்கள் என்றும், இப்படியாக வேதாகமத்தை மக்களுக்குப் போதித்தனர். ஜனங்களுக்கு தாங்கள் எவைகளைச் சொல்ல எண்ணினார்களோ, அதை மாத்திரம் சொன்னார்கள் என்பது தான் இதன் இயல்பான பொருள்.

இக்காலக் கட்டத்தில்தான் தெளிப்பு ஞானஸ்நானம் மற்றும் இசைக்கருவிகளைக் குறித்த உபதேசத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால், கத்தோலிக்க சபையும் ரோம மற்றும் கிரேக்க கிளைகளாக பிளவுபட்டு போயின. காலஞ்செல்லச் செல்ல, ரோம கத்தோலிக்க சபை தமது ஆலோசகர்களைக் கொண்டு தனது முறையில் மேலும் பல நூதன உபதேசங்களை மேற்கொண்டனர். இறுதியாக, கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டில் கத்தோலிக்க சபை உபதேசத்திலும், ஒழுக்க ரீதியிலும் மிகவும் சீர்கெட்டுப் போயிருந்தபோது மார்ட்டின் லூத்தர் என்பவர் தாம் ஒரு பாதிரியாராக இருந்தும், சபையை மறுமலர்ச்சியடையச் செய்ய முயற்சித்தார். எப்படியிருப்பினும், அவர் அச்சபையின் ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட்டபோது, தான் சரியென நினைத்த காரியங்களை போதிக்கவும், கைகொள்ளவும் சபையை விட்டு விலகிப்போனார். இதிலிருந்து மறுமலர்ச்சி இயக்கம் அல்லது புராட்டஸ்டண்ட் பிரிவு உண்டாயிற்று. அதிலிருந்தே இன்றுள்ள அநேக நாமகரண (பெயர்) கூட்டங்கள் உருவாயின. லூத்தரின் வேதாகமத்திற்கு திரும்புங்கள் என்ற முயற்சியுடன் கூடிய போதனை உலகின் பல பாகங்களிலும் பிரதிபலித்தன. இருந்தபோதிலும் அவர்கள் முழு வெற்றி பெறவில்லை.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்த நாமகரண கூட்டத்தார்கள், பிரிவினைகளிலும், குழப்பங்களிலும் வளர்ந்தமையால் அதிலே சலிப்படைந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தாங்கள் செய்த தவறுகளை விட்டு, வேதாகமத்திற்கே முற்றிலும் திரும்பினார்கள். அவர்களின் ஆவல் ஒரு புதிய சபையை தோற்றுவிப்பதாக இராமல்,

வசனங்களில் கூறப்பட்ட ஒரே சபைக்குத் திரும்புவதாக இருந்தது. அவர்கள் அப்படிச் செய்தார்கள். அதிலிருந்து புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்பும்படியான வேண்டுகோள்கள் விடப்பட்டன. இலட்சக்கணக்கானோர் இதைக் கேட்டு, மனித உபதேசங்களை விட்டு கர்த்தருடைய சபையில் அங்கமாகி சாதாரணமாகத் தங்களை கிறிஸ்தவர்கள் என்று மாத்திரம் அழைத்துக் கொண்டனர். வேதாகமத்தையே தங்களின் ஒரே வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டனர். சத்தியத்தைப் போதிக்கும்படி உலகமெங்கிலும் சென்ற கிறிஸ்தவர்கள் ஆப்பிரிக்கா, இந்தியா, ரஷ்யா, போலந்து போன்ற பகுதிகளில் ஏற்கனவே இருந்த பிராந்திய சபைகள் தனது பரிசுத்தத்தோடு விளங்கினதைக் கண்டுபிடித்தனர். அந்த சபை அன்று போலவே இன்றும் என்றும் நிலைத்திருக்கிறது. இது ஒன்றே வேதாகமத்தில் சொல்லப்பட்ட உண்மை சபை. அடையாளம் காட்டி ஆரம்ப காலத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள முன் மாதிரியை பின்பற்றும்போது, நாம் கர்த்தருடைய (உண்மை) சபையாகிறோம். விதை தேவனுடைய வசனம் (லூக்.8:11). அப்போஸ்தலர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவைகளையே இன்றைக்கும் அது தோற்றுவிக்கிறது - கிறிஸ்த வர்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கமாகிறார்கள். கர்த்தருடைய ராஜ்யம் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியது என்பது நமக்குத் தெரியும். ஆதலால் அது எங்காவது நிலைத்திருக்க வேண்டும். அது ஸ்தாபிதம் பெற்ற நாள் துவக்கம், தொடர்ந்து நிலைத்திருக்கவே செய்கிறது. எந்த மனிதனாலும், பிசாசினாலும் அதை அழிக்க இயலாது. இது தான் கர்த்தருடைய ராஜ்யம். அவருடைய சபை, ஆரம்பம் முதல் முடிவு வரை வெற்றி சிறக்கக் கூடியது. இறுதியில் என்றென்றும் கர்த்தரோடே கூட வாசம் பண்ணக்கூடியது.

## கேள்விகள்

**தயவு செய்து சரியான விடைகளைத் தருக:**

1. கர்த்தருடைய சபையின் ஸ்தாபித வரலாற்றை நாம் எங்கே காண்கிறோம்?------------------------------------------------------------
2. எந்த பட்டணத்தில் அது ஸ்தாபிக்கப்பட்டது?------------------------
------------------------------------------------------------------------
3. அப்பொழுது எத்தனைபேர் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?------------------------------------------------------
4. சுவிசேஷம் வேறு எங்கே பிரசங்கிக்கப்பட்டது?----------------------
------------------------------------------------------------------------
5. பவுல் சென்ற சுவிசேஷப் பயணங்கள் எத்தனை?---------------------

6. பவுல் யூதர்களுக்கு மட்டுமே பிரசங்கித்தாரா?------------------------

7. பவுலின் ஊழியத்தின் விளைவாக எந்த இரண்டு கண்டங்களில் சபை ஸ்தாபிக்கப்பட்டது?------------------------
------------------------------------------------

8. சிதறிப்போன சீஷர்கள் என்ன செய்தனர்?------------------------
------------------------------------------------

9. கர்த்தருடைய சபையை பிரசங்கித்தது யார்?------------------------
------------------------------------------------

10. விசுவாசத்தினிமித்தம் கொல்லப்பட்ட அப்போஸ்தலர்கள் எத்தனை பேர்?------------------------

11. உபத்திரவங்களிலும் சபை வளர்ந்ததா?------------------------

12. பிற்காலங்களில் என்ன சம்பவிக்கும் என்று பவுல் குறிப்பிட்டார்?-
------------------------------------------------

13. சபையின் மீது தாக்குதல் எப்படி ஆரம்பித்தது?------------------------
------------------------------------------------

14. கி.பி. 606-ல் என்ன சம்பவித்தது?------------------------

15. கர்த்தருடைய சபைக்கு என்ன நேர்ந்தது?------------------------

16. அடுத்த அநேக நூற்றாண்டுகள் ஏன் இருண்டயுகமென கருதப்பட்டது?------------------------

17. கத்தோலிக்க சபை எந்த இரு பிரிவுகளை அடைந்தது?------------------------
------------------------------------------------

18. ரோமன் கத்தோலிக்க சபையை மறுமலர்ச்சியடைய செய்ய--முயற்சித்த நபர் யார்?------------------------

19. அதை மறுமலர்ச்சியடையச் செய்ய அவர் ஏன் முயற்சித்தார்?----
------------------------------------------------

20. இவையெல்லாவற்றினின்று வெளிவந்த இயக்கம் யாது?------------------------
------------------------------------------------

21. வேதாகமத்திற்கு திரும்புவதிலே அவர்கள் முழு வெற்றியைக் கண்டார்களா?------------------------

22. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் என்ன சம்பவித்தது?------------------------

23. வேதாகமத்திற்குத் திரும்பிய அந்த மக்கள் கர்த்தருடைய சபைக்கு மாதிரியாக ஒரு புதிய சபையை ஸ்தாபித்தனரா?------------------------
------------------------------------------------

24. இதே சபை உலகின் பிற பாகங்களிலும் கிறிஸ்தவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதா?------------------------

25. உண்மையான கிறிஸ்துவின் சபை இன்றுள்ளதா?------------------------

## பேசும் வேதாகமம் : 4

1. நம்முடைய கர்த்தர் எந்த கோத்திரத்திலே தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது? - யூதா - எபி.7:14
2. இரத்தஞ்சிந்துதலில்லாமல் எது உண்டாகாது? - மன்னிப்பு - எபி.9:22
3. ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் எப்படிப்பட்டவனாயிருப்பான்? - குற்றவாளியாயிருப்பான் - யாக்.2:10
4. விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி எதனாலே வரும்? - தேவனுடைய வசனத்தினாலே - ரோம.10:17
5. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று எது சொல்லுகிறது? - வேதம் - ரோம.10:11
6. புருஷனானவன் யாருடைய மகிமையாயிருக்கிறான்? - தேவனுடைய - 1கொரி.11:7
7. ஸ்திரீயானவள் யாருடைய மகிமையாயிருக்கிறாள்? - புருஷனுடைய - 1கொரி.11:7
8. நம்முடைய குடியிருப்போ எங்கே இருக்கிறது? - பரலோகத்தில் - பிலி.3:20
9. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் எப்படிப்பட்டவராயிருக்கிறார்? - சித்தமுள்ளவராயிருக்கிறார் - 1தீமோ.2:4
10. சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, எதற்கு முந்திக்கொள்ளும்? - நியாயத்தீர்ப்புக்கு - 1தீமோ.5:24

## பொது அறிவுச் சோதனை

1. பனிக்கட்டி நீரில் மிதப்பது ஏன்?

அ)பனிக்கட்டியின் அடர்த்தி நீரின் அடர்த்திக்கு சமம் ஆ)பனிக்கட்டியின் அடர்த்தி நீரின் அடர்த்தியை காட்டிலும் குறைவு இ)மேற் கூறிய ஏதுவும் இல்லை

2. ஆப்பிரிக்காவின் புல்வெளி என்று அழைக்கப்படுவது எது?

அ)டவ்லேண்ட் இ)கீரின் லேண்ட் இ)துந்திராஸ்

3. கிரகங்கள் சுற்றும் திசை எது?

அ) மேற்கிலிருந்து கிழக்காக ஆ)கிழக்கிலிருந்து மேற்காக இ)வடக்கிலிருந்து தெற்காக


4. பிரிக்கப்பட்ட பாலில் எது அப்புறப்படுத்தப்படுகிறது?

அ)புரதம் ஆ)மாவுச்சத்து இ)கொழுப்பு

5. சூரிய மண்டலத்தை கண்டு பிடித்தவர் யார்?

அ)ஹெப்லர் ஆ)நியூட்டன் இ)கோப்பர் நிக்கஸ்

'ஒரேவழி' தபால் வழி பாடத்தை உங்கள் திருச்சபையில் அறிமுகம் செய்ய விரும்புகிறோம். விருப்பமுள்ள சபை ஊழியர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். இயேசு ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை அதே போல் நாங்களும் ஒருவரையும் புறம்பே தள்ளுகிறதில்லை.



## சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 31

D.எபிநேசர்

**யோனத்தான்:** நாம் யாரை நோக்கி ஜெபம் செய்யணும்?

**தாவீது:** இந்தக் கேள்விய முன்னமே எதிர்பார்த்தேன்! ஏன்னா இது முக்கியமான கேள்வி. அதுகூட தெரியாம பலர் ஜெபம் பண்றது நமக்கு வருத்தமா இருக்கு. ஆனா இயேசு கிறிஸ்து மத்6:8,9. பிதாவை நோக்கி ஜெபம் செய்ய வேண்டும் என்று இந்த வசனங்களில் தெளிவா சொல்லிக் கொடுத்திருக்காரு!

**யோனத்தான்:** ஆனா நிறைப்பேர் அன்புள்ள இயேசு சுவாமி என்று தான் ஜெபம் செய்யறாங்க!

**தாவீது:** சாதாரணமானவங்க ஒரு பக்கம் இருக்கட்டும். பெரிய பெரிய ஊழியக்காரங்களும் அப்படித்தான் பண்றாங்க! இயேசு எப்படி சொல்லிக்கொடுத்தாரோ அப்படியே செய்ய அவங்களுக்கு மனமில்லை. இது வேதத்தின்படி தவறாகும் 1கொரி4:6. சிலர் 'இயேசு கிறிஸ்துவின் மூலமாக' என்று சொல்லி முடிப்பார்கள். இது சாதாரண அறிவுக்கே ஒவ்வாத விஷயமில்லையா? எனவே பிதாவை நோக்கி, இயேசு கிறிஸ்து மூலமாக ஜெபிக்கணும் யோவா.16:23.

**யோனத்தான்:** சிலபேர் நீண்ட நேரம் ஜெபிக்கறாங்களே!

**தாவீது:** தனிப்பட்ட ஜெபங்கள் எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. ஆனா ஆராதனையிலோ அல்லது கூட்டங்களிலோ அப்படி ஜெபிக்கறது சரியல்ல.

**யோனத்தான்:** சிலர் ஜெபத்துல ஒரு பெரிய பிரசங்கமே பண்ணிடறாங்களே!

**தாவீது:** ஆமா. ஆண்டவர் அதைப்பத்தி என்ன சொல்றார்னு இந்த வசனங்கள் நமக்கு உணர்த்துது மத்.6:5-8.

**யோனத்தான்:** "அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்"...... "அன்றியும்...... அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்".

**தாவீது:** சரி யோனத்தான். நாம விடைபெறலாம். எல்லாருக்காகவும் ஜெபம் பண்ணு. ஆனா ஆண்டவர் சொன்னபடி ஜெபம் பண்ணு! சரியா!


**யோனத்தான்:** சரி தாவீது! **Bye Bye.**

*(மீண்டும் சந்திப்போம்)*

# வேதம் எத்தனை பாகங்களை கொண்டது?

# How Many Parts The Bible Has?

S.Yesiahan



அன்பானவர்களே நம் கையிலிருக்கும் வேத புத்தகம் எத்தனை பாகங்களை கொண்டது? எத்தனை புத்தகங்களைக் கொண்டது? எத்தனை காலங்களைக் கொண்டது? என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியம்.

**வேதம்** பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பாகங்களைக் கொண்டது.அதாவது, பழைய ஏற்பாடு 39 புத்தகங்களையும் புதிய ஏற்பாடு 27 புத்தகங்களையும் கொண்டதுமாயிருக்கிறது. இந்த 66 புத்தகங்களையும் நாம் படிக்கும் போது வேதத்தில் மூன்று காலங்கள் இருப்பது தெரிய வருகிறது. இம்மூன்று காலங்களில் நாம் எந்த காலத்துக்குரியவர்கள் என்று நாம் தெரிந்து கொண்டு அந்த காலத்திற்குரிய உபதேசத்தின்படி இரட்சிப்படைய வேண்டும் என்பதற்காகதான் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று இயேசு சொன்னார் (யோவா.5:39). மேலும் இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினால் நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது என்று (யோவா.20:31)-ல் இயேசு சொல்கிறார்.

**இப்பொழுது மேலே குறிப்பிட்டுள்ள மூன்று காலங்களை படிப்போம்**

1. ஆதாம் முதல் மோசே வரைக்கும் பிதாக்களின் காலம்

2. மோசே முதல் இயேசு கிறிஸ்துவரைக்கும் தீர்க்கதரிசிகளின் காலம் அல்லது இஸ்ரவேலரின் காலம்

3. கிறிஸ்து முதல் கிறிஸ்துவின் வருகைவரைக்கும் கிறிஸ்துவின் காலம் அல்லது கிருபையின் காலம் என்று வேதம் தெளிவுபடக் கூறுகிறது.

**1. பிதாக்களின் காலம்:**

பிதாக்களின் காலத்தில் தேவன் மனிதரோடு நேரடியாக பேசினார். ஆதாம்- ஆதி.2:16,17; ஆபிரகாம்- ஆதி.12:2; யாக்கோபு- ஆதி.35:9,10; ஈசாக்கு- ஆதி.26:24.

**2. தீர்க்கதரிசிகளின் காலம் அல்லது இஸ்ரவேலரின் காலம்**

இஸ்ரவேலரின் காலத்தில் தேவன் தெரிந்து கொண்ட மக்களுக்கு தீர்க்கதரிசிகள் மூலம் பேசினார். உபா.4:1-5; மேலும்

தீர்க்கதரிசிகளின் காலத்தில் கிறிஸ்துவின் காலம் வரபோகிறதை முன் சொல்லி இருக்கிறார். உபா.18:15; எரே.31:31,32; ஏசா.11:1,2

இஸ்ரவேலரின் காலம் முடிவடையும் தருவாயில் தேவன் தம்முடைய வாக்குதத்தத்தின்படி தன்னுடைய குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினார் (கலா.4:4).

**3. கிறிஸ்துவின் காலம் அல்லது கிருபையின் காலம்:**

கிறிஸ்துவின் காலத்தில் தேவன் தம்முடைய குமாரன் மூலமாக பேசினார். யோவா.1:17; எபி1:1.

இப்படி பிதாக்கள் காலத்தில் நேரடியாகவும், இஸ்ரவேலர் காலத்தில் தீர்க்கதரிசிகள் மூலமாகவும், கடைசி காலத்தில் கிறிஸ்துவின் மூலமாகவும் தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். அது மட்டும் அல்லாமல் (உபா.5:7) வசனத்தின்படி என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று சொன்னதின்படி இஸ்ரவேல் மக்கள் தேவன் மீது வைராக்கியம் கொண்டபடியினால் இயேசுவை புறக்கணித்தார்கள். ஆனால் தேவனோ........... இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து பேசினார் (மத்.17:5). இதைக் கூட சரியாக புரிந்து கொள்ளாத மக்கள் நியாயப்பிரமாணத்தின் மீது கொண்டிருந்த பக்தியினால் இயேசுவை புறக்கணித்து ஆபிரகாமின் சந்ததி என்றும், மோசேயின் சீஷர்கள் என்றும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள் (யோவா.8:33; யோவா.9:28).

ஆகையால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரவேல் மக்களைக் குறித்து, சகோதரரே இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும்....... தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கிய முண்டென்றும் அவர்களைக் குறித்து சாட்சி சொல்லுகிறான். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல (ரோம.10:2) என்று கூறுகிறான்.

ஆகவே யூத ஜனங்கள் கிறிஸ்துவை வெறுத்து நியாயப்பிரமாணத்தை ஆதரித்தார்கள். ஆனால் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாகவும், கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும் உண்டாயின என்று கூறி நியாயப்பிரமாணத்திற்கு பிறகு வர போகிற கிறிஸ்துவின் பிரமாணத்தை வேதம் அறிமுகப்படுத்துகிறது (யோவா.1:17). ஆனால் இன்றைக்கும் சிலர் ..... நியாயப்பிரமாண போதகராக இருக்க விரும்புகிறார்கள் (1தீமோ.1:7). மோசே கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்ததை (உபா.18:15) புதிய ஏற்பாட்டில் பேதுரு வலியுறுத்தி காண்பித்தது மட்டும் அல்லாமல் எச்சரித்து புத்தி சொல்லியும் இருக்கிறான் (அப்.3:22-24). அப்படி இருந்தும் யூத ஜனங்கள் அல்லது இஸ்ரவேல் மக்கள் நியாயப்பிரமாணத்தை ஆதரித்து இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள்.

விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் என்று நியாயப்பிரமாணத்தில் முற்றிலும் தேறின பவுல் கூறுகிறார் (ரோம10:4).

ஆகவே இதை வாசிக்கும் அருமையான சகோதர, சகோதரிகளே சற்று சிந்தித்துப் பாருங்கள். மோசே மூலமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமா? அல்லது கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கப்பட்ட சுயாதீனப்பிரமாணமா? (கிருபையும், சத்தியமும்) நம்மை இரட்சிக்கிறது. இன்றைக்கும் சிலர் நியாயப்பிரமாணத்தின்படி நீதியை தேடுகிறார்கள் அவர்கள் கிறிஸ்துவுக்கு மறைமுகமான எதிரிகள் என்று தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். ஏனென்றால்...... நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக கிறிஸ்து வந்தார் (கலா.4:4) என்றும், நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விருப்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலா.5:4) என்றும், நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள் என்றும் கலா.3:10-ல் எழுதியிருக்கிறது. மற்றும் நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானல் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே (கலா2:21) என்று பவுல் கூறுகிறார்.

இப்படி இருக்க சகோதர சகோதரிகளே நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாக வேண்டுமாயின் கடைசி காலத்தில் கொடுக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் உபதேச சட்டத்தைக் கைக்கொண்டு அதற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படியுங்கள் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோம.6:17,18) என்று பவுல் கூறுகிறான். ஏனென்றால் நியாயப்பிரமாணத்தினால் ஒருவனும் நீதிமானாக்கப்படுகிறதில்லை (கலா.2:16). ஆகவே வேதத்திலுள்ள உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டுமாயின் அல்லது நாம் எந்த காலத்துக் குரியவர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமாயின் நாம் வேதத்தை நன்கு பகுத்து படிக்கவேண்டும். உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்த வேண்டுமாயின் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதி என்று பவுல் கூறுகிறான் (2தீமோ.2:15). ஆகவே வேதத்தை நல்ல முறையில் படித்து நியாயத்தீர்ப்புக்குத் தகுதியாயிருங்கள் (யோவா.12:48). காதுள்ளவன் கேட்கக்கடவன் (மத்.13:9; மாற்.4:9). இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவனும், கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் (வெளி1:3). கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

# மூன்று விதிகள் - The Rule of Three

மூன்று காரியங்கள் அடக்கவேண்டியவை:
கோபம், நாவு, போக்கு

மூன்று காரியங்கள் விருத்திசெய்யவேண்டியவை:
தைரியம், அன்பு, சாந்தம்

மூன்று காரியங்கள் புகழப்படவேண்டியவை:
சிக்கனம், உழைப்பு, தாமதமின்மை

மூன்று காரியங்கள் வெறுக்கப்பட வேண்டியவை:
கொடூரம், கர்வம், நன்றியறியாமை

மூன்று காரியங்கள் தேவையென விரும்பப்படவேண்டியவை:
ஆரோக்கியம், மனதிருப்தி, நண்பர்கள்

மூன்று காரியங்கள் ரசிக்கப்படவேண்டியவை:
பெருந்தன்மை, புத்திக்கூர்மையான சக்தி, வசீகரமிக்கவை

மூன்று காரியங்கள் கொடுக்கப்பட வேண்டியவை:
தேவையிருப்போருக்கு தர்மம்,
கவலையிலிருப்போருக்கு ஆறுதல்,
தகுதியுடையோருக்குப் பாராட்டு

-The Voice of Truth International

## வாசகர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள ஊழியர் B.அர்ஜுனன் அவர்களுக்கு தங்கள் அன்பை என்றும் மறவா கிறிஸ்துவுக்குள் சகோ. G.P ஏசையன் ராஜ் எழுதும் அன்பின் இனிய கடிதம். தேவனுடைய பெரிதான கிருபையால் அனைவரும் நலம். அதுபோல தங்களின் சுக நலம் அறிய எங்களது அனுதின ஜெபங்கள். பிப்ரவரி மாத இதழ் மிகவும் அருமையாக அமைந்திருக்கிறது. தேவனுடைய வார்த்தையை நன்கு அறியாமல் தவறாக புரிந்து கொண்டு கிறிஸ்தவர் என்ற வெளி வேஷத்துடன் வாழ்கிறவர்களுக்கு நல்ல ஆவிக்குரிய அறிவுரையாக அமைந்திருப்பதை குறித்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தங்களுடைய ஒவ்வொரு மாத வசன இதழையும் ஒரு பொக்கிஷத்தைப் போல பாதுகாத்து வசனங்களை தியானித்து அதை அநேக தேவனுடைய பிள்ளைகளுக்குப் போதித்து வருகின்றேன். எங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் இது பெலன் அடைய உதவியாக இருக்கிறது. தேவன் மென் மேலும் தங்களுடைய ஊழியத்தை ஆசீர்வதிப்பாராக. ஜெபியுங்கள் ஜெபிக்கின்றோம்.

என்றும் தங்கள் அன்பை மறவா
சகோ. G.P ஏசையன் ராஜ்

# சாமர்த்தியத்தைப் பார்ப்போம்



*வேதபகுதி: 2நாளா.25:1-28*

*அமத்சியா இருபத்தைந்தாம் வயதிலே ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் யூதாவை ஆண்டான். இஸ்ரவேலிலே லட்சம் பராக்கிரம சாலிகளை நூறு தாலந்து வெள்ளி கொடுத்து கூலிக்கு அமர்த்தினான். தேவனுடைய மனுஷன் ஒருவன் அவனிடத்தில் வந்து இஸ்ரவேலின் சேனை உம்முடனே வரலாகாது என்றான். போக மனதானால் நீர்போம், தேவன் உம்மைச் சத்துருவுக்கு முன்பாக விழப்பண்ணுவார். அவரால் ஒத்தாசை செய்யவும் விழப்பண்ணவும் கூடும் என்றான்.*

*அமத்சியா தன் ஜனத்தைக் கூட்டி உப்புப் பள்ளத்தாக்குக்குப் போய், சேயீர் புத்திரரில் பதினாயிரம்பேரை வெட்டினான். மேலும் அவனோடு சென்ற யூதா புத்திரரும் பதினாயிரம்பேரை உயிரோடு பிடித்து, ஒரு கன்மலையுச்சியிலே கொண்டுபோய், அவர்களெல்லாரும் நொறுங்கிப்போகத்தக்கதாய் அந்தக் கன்மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டார்கள். என்ன கொடூரம் இல்லையா! இப்படி அவர்களை முறியடித்து அவர்கள் தெய்வங்களை தனக்காக எடுத்துக்கொண்டு வந்து அவைகளுக்கு முன்பாகப் பணிந்தான். கர்த்தர் அமத்சியாவின் மேல் கோபமூண்டவராகி ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி தங்கள் ஜனத்தை உமது கைக்குத் தப்புவிக்காதே போன ஜனத்தின் தெய்வங் களை நீர் நாடுவானேன் என்றான். அவனோ உன்னை ராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக வைத்தார்களோ? அதைவிட்டுவிடு என்று தட்டுதல் செய்தான்.*

*பின்பு ஏதோமியரை ஜெயித்தோம் என்ற கர்வத்திலே இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுக்கு ஆள் அனுப்பி; **நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா என்று சொல்லியனுப்பினான்**. அதற்கு யோவாஸ் லீபனோனிலுள்ள முட்செடியானது லீபனோனிலுள்ள கேதுமரத்தை நோக்கி: நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ்செய்து கொடு என்று கேட்கச் சொல்லிற்று; ஆனாலும் லீபனோனிலுள்ள ஒரு காட்டு மிருகம் அந்த வழி போகையில் ஓடி அந்த முட்செடியை மிதித்துப்போட்டது. நீ ஏதோமியரை அடித்தாய் என்று பெருமைபாராட்ட உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப்பண்ணினது. கர்த்தர் ஏதோமின் தெய்வங்களை அமத்சியா நாடினதினிமித்தம் அவர்களை அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுத்தார். அப்படியே யோவாஸ் அமத்சியாவுக்கு எதிராக புறப்பட்டுவந்து யூதாவை முற்றிகை போட்டான் அவரவர் தங்கள் கூடாரங்களை விட்டு ஓடிப்போனார்கள். அமத்சியா லாகீசுக்கு ஓடிப்போனான். அவன் பிறகே லாகீசுக்கு மனுஷரை அனுப்பி அவனை கொன்று போட்டான்.*

*இந்த சம்பவத்தில் பார்த்தபடி கர்த்தருடைய வார்த்தையை புறம்பே தள்ளி தன் பெலத்தால் ஜெயங்கொண்டேன் என்று கர்வம் கொண்ட அமத்சியாவை அவன் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுத்தார். அதுவும் அவன் விக்கிரகத்தை நாடினது கர்த்தருக்கு எழாத பாவமாயிற்று. தீர்க்கதரிசி சொன்னதுபோல தேவனாலே ஒத்தாசை செய்யவும் விழப்பண்ணவும் கூடும் என்ற வசனத்தின்படியே நடந்தது. அமத்சியாவைப் போல சாமர்த்தியத்தை பார்ப்போமா என்று யாரையும் சவால் விட்டு கூப்பிடாதீர்கள். கர்த்தர் அதை கேட்பார் பின்பு அமத்சியாபோல நாட்டை விட்டே ஓடவேண்டிய அவலநிலை ஏற்படும்.*

*மனப்பாட வசனம்:*
*"அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை"*
*(நீதி.16:18).*

## வேத அறிவுப்போட்டி எண் 54 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | R.சுவாதிரவி | -ஈரோடு |
| V.தண்டபாணி | -சிலுவத்தூர் | M.சேகர் | -மோதுப்பட்டி |
| S.எஸ்தர்மேரி | -வத்தலக்குண்டு | A.ஜோதிகாந்தம் | -போடப்பாறை |
| A.சேவியர்மேரி | -மதுரை | S.செபாஸ்டின் | -கோவை |
| V.கோவலன் | -மதுரை | T.வேலுச்சாமி | -ஜேடர்பாளை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | K.மோகன் | -கொமாரபாளை |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | M.உமா | -கம்பிலியம் |
| G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் | G.P.ஏசையன் ராஜ் | -கோபி |
| E.டென்சிங்மனோகர் | -மதுரை | K.சதீஸ் குமார் | -தெக்கலூர் |
| S.ஜெயராணி | -கோவை | MA.கந்தசாமி | -தெக்கலூர் |
| M.ராஜேஸ்வரி | -ராக்கியவல்சு | M.பாரதி | -கோபி |
| N.கமலவேணி | -சென்னை | G.மெர்சிரூபி | -கொடுவாய் |
| S.எபிநேசர்ஜெபமணி | -திருக்கண்டலம் | S.R.பெரியசாமி | -செல்லூர் |
| S.லெட்சுமிதேவி | -திருக்கண்டலம் | P.கந்தசாமி | -கீரனூர் |

## வேத அறிவுப்போட்டி எண் 54 -ன் விடைகள்

1. நியாயத்தீர்ப்பு - ஓசியா10:4
2. பால்மறந்தவர்களுக்கும், முலைமறக்கப்பண்ணப் பட்டவர்களுக்குமே - ஏசா.28:9
3. பவுல் - எபே.3:8
4. வேராயிருக்கிறது - 1தீமோ.6:10
5. அடக்குகிறார் - யோபு26:12
6. யாக்கோபு - ஆதி.25:27
7. அவிந்துபோகலாகாது - லேவி.6:13
8. பேதுரு - அப்.11:9
9. பவுல் - கலா.4:19
10. இயேசு - லூக்.13:33

## FORM IV


| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | : Batlagundu. |
| 2. | Periodicity of its Publication | : Monthly. |
| 3. | Printer's Name | : R.Sathiyamoorthi. |
| 4. | Address | : 14/13/24 Melamanthai st.,<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 5. | Whether citizen of India | : Yes. |
| 6. | Publisher's Name | : B.Arjunan. |
| 7. | Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 8. | Editor's Name | : B.Arjunan. |
| 9. | Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.20005

Signature of Publisher.

# வேத அறிவுப் போட்டி எண்.55

*போட்டியாளர்கள் கவனத்திற்கு.*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. ஒத்தாசைசெய்யவும் விழப்பண்ணவும் தேவனாலே கூடும் என்று எந்த ராஜாவைப் பார்த்து தீர்க்கதரிசி சொன்னான்?
2. கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும், எதுவுமுள்ள தேவன்?
3. பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தவன் யார்?
4. குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய ஒருவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான் அவனுடைய பெயர் என்ன?
5. எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
6. சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் யாரைப் பிரசங்கிக்கிறார்கள்?
7. பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் எவராலே உண்டாயிருக்கிறார்கள்?
8. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் எவரின்மூலமாய் உண்டாயின?
9. அவர் செய்ய நினைக்கிறதையும், மந்தாரம் எழும்பப் போகிறதையும், எவைகள் அறியப்படுத்தும்?
10. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் யாருக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்?

## நடப்புச் செய்திகள்

- காஷ்மீரில் 30 ஆண்டுகளாக இல்லாத கடும் பனிப்பொழிவு. பனிச்சரிவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமானது.
- புதுதில்லியில் பல ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படும் பெண்கள் மசோதாவில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது தனிநபரின் உரிமையை விட பொது நலனையே முக்கியமாக கருதவேண்டும் என்று மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.
- சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி ஜோடிகள் திருமணம் செய்து கொள்கிறார்கள்.
- மலேசியாவில் கடும் வெயில் கொளுத்துகிறது. அங்குள்ள காட்டுப் பகுதியில் திடீர் என ஏற்பட்ட தீயினால் 6 மாநிலங்களில் உள்ள வனப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் கருகி வருகிறது.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Mar. 2005.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.**

**கிறிஸ்துவின் சபை**

7.2.102–D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு – 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: 04543–263278 செல்: 9443558041
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்

**The Master Course**

தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.30/– செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்




**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5, BATLAGUNDU - 624 202
S.INDIA

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா –ரூ.50/–
வெளிநாடு – ரூ.500/–
தனிப் பிரதி – ரூ.5/–

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India